# මුදල් කොමිෂන් සභාව

**(ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 'ජ' ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී)**

# நிதி ஆணைக்குழு

**(அரசியலமைப்பின் 154'எ ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டது)**

# Finance Commission

**(Established under Article 154 R of the Constitution)**

## වසර 2013 සඳහා වූ මුදල් කොමිෂන් සභාවේ

## වාර්ෂික කාර්යසාධන වාර්තාව සහ වාර්ෂික ගිණුම්

**2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும**

**வருடாந்த கணக்கீடும்**

## Annual Performance Report and the Statement of Accounts of the Finance Commission for 2013

## உள்ளடக்கம்


**1. அறிமுகம்** ....... 2

1.1 நிதி ஆணைக்குழுவின் ஆரம்பம் ....... 2

1.2 நிதி ஆணைக்குழுவின் பொறுப்புகள் ....... 2

1.3 ஆணைக்குழுவின் மூலாதாரக்கடமைகள் ....... 3

**2. நிதி ஆணைக்குழுவின் முக்கியமான வழிகாட்டல்** ....... 3

2.1 தொலை நோக்கு ....... 3

2.2 பணிக்கூற்று ....... 3

2.3 முதன்மையாக அழுத்தம் கொடுக்க வேண்டிய பகுதிகள்வூாசரளவ யுசநயள ....... 3

**3. நிறுவக ஒழுங்கமைப்பு மற்றும் உத்தியோகத்தர் தகவல்** ....... 4

3.1 நிதி ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பு ....... 4

3.2 நிதி ஆணைக்குழு செயலகம் ....... 4

3.3 2013.12.31 திகதியில் உள்ளவாறு உத்தியோகத்தர்கள் ....... 4

3.4 நிறுவக அட்டவணை ....... 6

**4. 2013 இல் நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை** ....... 7

4.1 கொள்கை ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பகுதி ....... 7

4.2 பெறுபேற்று அடிப்படை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் பகுதி ....... 8

4.3 வரவுசெலவு திட்டமிடல் மற்றும் எதிர்வுகூறல் பகுதி ....... 9

4.4 கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் பகுதி ....... 10

4.5 நிர்வாகப் பகுதி ....... 10

4.6 நிதிப் பகுதி ....... 11

**5. பொது நிர்வாகம்** ....... 13

5.1 2013 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர்கள் ....... 13

5.2 நிதி ஆணைக்குழுவுக்கு இட மாற்றம் பெற்ற உத்தியோகத்தர்கள் - 2013 ....... 14

5.3 நிதி ஆணைக்குழுவுக்கு புதிய நியமனங்கள்- 2013 ....... 14

**6. நடுத்தர காலத் தில் செயலாற்றுகைகைய பலப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட உபாயங்கள்** 14

**7. எண்பார்வை அறிக்கை** ....... 15

# நிதி ஆணைக்குழுவின் 2013 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை மற்றும் நிதிக்கூற்று

## 1. அறிமுகம்

### 1.1 நிதி ஆணைக்குழுவின் ஆரம்பம்

மாகாண சபைகளையும் மற்றும் நிதி ஆணைக்குழு (நிஆ) வையும் நிறுவுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டதாக 1987 இல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் அறிமுகப்படுத்தப் பட்டது. மாகாண திட்டமிடலுக்காகவும் மற்றும் மாகாணங்களுக்கு வளங்களை மாற்றும் நடவடிக்கைகளை எளிதாக்குவதற்காகவும் நிதி ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது.

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தில் காட்டப்பட்டது போல, நிதி ஆணைக்குழு (நிஆ) வின் பிரதான பொறுப்பு நாட்டில் சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை அடைவதை நோக்கமாகக் கொண்டு, அடிப்படைக் கொள்கைகள், செயற் திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கும் ஒன்பது மாகாணங்களுக்கிடையில் நிதிகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் அரசாங்கத்துக்கு பரிந்துரைகளைச் செய்தல் ஆகும்

### 1.2 நிதி ஆணைக்குழுவின் பொறுப்புகள்

உறுப்புரை 154 ஆர்( 3),(4) மற்றும் (5) ன் கீழ் காட்டப்பட்டது போல நிதி ஆணைக்குழுவின் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புகள் பின்வருமாறு:-

1. மாகாணங்களின் தேவைகளை ஈடு செய்வதற்குப் போதுமான நிதிகளை வருடாந்தப் பாதீட்டிலிருந்து பகிர்ந்தளிப்பதற்காக அரசாங்கத்தோடு ஆலோசனை செய்வது மற்றும் அரசாங்கத்துக்கு பரிந்துரைகளை வழங்குதல்

2. ஆணைக்குழு பின்வருவனவற்றை ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யும்:- –

   அ) அரசாங்கத்தினால் மாகாணங்களின் பயன்படுத்தலுக்காக ஆண்டு தோறும் வழங்கும் நிதியை எந்த கொள்கை அடிப்படையில் பல்வேறு மாகாணங் களுக்கிடையில் பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும்-மற்றும்

   ஆ) ஜனாதிபதியால் மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்.

   இ) ஆணைக்குழு நாட்டில் சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை அடைவதை நோக்கமாகக் கொண்டு அடிப்படைக் கொள்கைகளை உருவாக்கும்., அதற்கமைவாக மக்கள் தொகை, தனிநபர் வருமானம், முன்னேற்றத்தை அவசிய தேவையாக்கி, சமூக பொருளாதார வேறுபாடுகளைக் குறைப்பது, மற்றும் ஒவ்வொரு மாகாணத்தி னதும் தனிநபர் வருமானத்துக்கும் ஏனைய மாகாணங்களுக்கிடையிலான ஆகக் கூடிய தனிநபர் வருமானத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைப் படிப்படியாகக் குறைக்க வேண்டிய தேவை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும். அத ற்கமைவாக, நிதி ஆணைக்குழு மாகாணங்களுக்கிடையில் நிதிகளைப் பகிர்ந்தளி க்கும்.

அரசியலமைப்பின் 154 ஆர்(7)உறுப்புரை ‘‘ஜனாதிபதி நிதி ஆணைக்குழுவால மேற் குறிப்பிடப்பட்ட உறுப்புரைக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு பரிந்துரைகளையும் அவை தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென’’ க் கோருகிறது.

### 1.3 ஆணைக்குழுவின் மூலாதாரக்கடமைகள்

**அ**. மாகாண தேவைகளை மதிப்பிடுதல்.

**ஆ**. மாகாணங்களுக்கிடையில் ஆண்டு தோறும் நிதிகளைப் பகிர்ந்தளித்தல்.

**இ**. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையை மீள்வரும் மற்றும் மூலதனத் தேவைகளுக்கிடையில் பங்கிடுதல்.

**ஈ**. மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG) மற்றும் பிரமாண அளவு அடிப்படைக் கொடை (CBG) ஆகியவற்றுக்கிடையில் மூலதன நிதிகளை தனித்தனியாகப் பகிர்ந்தளித்தல்

**உ**. அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தித் துறைகள் / முகவர்களுக்கிடையில் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG) யைப் பிரித்தளித்தல்

**ஊ**. மாகாண நிதியை சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் சமச்சீர் பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கோடு அடிப்படைக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை உருவாக்கல்

## 2. நிதி ஆணைக்குழுவின் முக்கியமான வழிகாட்டல்

### 2.1 தொலை நோக்கு

“எல்லா மாகாணங்களிலும் சமமான மற்றும் சமச்சீரானதுமான சமூக-பொருளாதார அபிவிருத்தி”

### 2.2 பணிக்கூற்று

மாகாணங்கள் பிரதேச சமச்சீர் அபிவிருத்தியை அடைவதற்காகவும் நியாயமானதும் சமமானதுமான ஒழுங்கில் மாகாணத்தினுள்ளும் மாகாணங்களுக்கிடையிலும் வேறுபாடுகளைக் குறைப்பதற்குப் பொருத்தமான பரிந்துரைகளை அரசாங்கத்துக்கு சமர்ப்பித்தல் , கொள்கைகள் வழிகாட்டுதல்களை உருவாக்கல் ,திட்டமிடல் மற்றும் திட்டமிடல் உதவிகளை வழங்கல், வளங்களைப் பகிர்ந்தளித்தல், அபிவிருத்தி முயற்சிகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல், தேசிய மற்றும் மாகாண முகவர்களை ஒருங்கிணைத்தல்

### 2.3 முதன்மையாக அழுத்தம் கொடுக்க வேண்டிய பகுதிகள்வுாசரளவ யுசநயள

- மாகாணங்களுக்கு நிதி வளங்கள் ஒதுக்குதல் மற்றும் பகிர்ந்தளிப்பதில் கொள்கைகள் உருவாக்கல் மற்றும் அறிவித்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்தல்
- மாகாணங்களுக்கிடையில் வளங்கள் நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதை நிச்சயித்தல்
- பிரதேச வேறுபாடுகளைக்குறைத்து மனித அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல்
- மாகாணங்களில் வளங்கள் திறமையாகப் பயன்படுத்தலை நிச்சயித்தல்
- மாகாண மற்றும் உள்ளுர் மட்டங்களில் வருமான உருவாக்கத்தை அதிகரித்தல்
- மாகாண மற்றும் உள்ளுர் நிறுவன ஆட்சியில் நிறுவன அபிவிருத்தியை பலப்படுத்தல்
- தேசிய மட்ட மற்றும் மாகாணங்களுக்கிடையில் பயனளிக்கக்கூடிய இணைப்பை அடைதல்
- அரச தனியார் கூட்டுத்தொழில் மூலம் தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் (PPP)
- நிதி ஆணைக்குழுவின் மனித மற்றும் நிறுவன ஆளுமையை அபிவிருத்தி செய்தல்

## 3. நிறுவக ஒழுங்கமைப்பு மற்றும் உத்தியோகத்தர் தகவல்

### 3.1 நிதி ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பு

நிதி ஆணைக்குழு, முறையே மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரிச் செயலாளர் ஆகிய இருவரையும் பதவிவழி அங்கத்தவர்களாக உள்ளடக்கி, மொத்தமாக ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டது. ஏனைய மூன்று அங்கத்தவர்களும் பிரதான சமூகங்கள் மூன்றைப் பிரதிநிதித்துவம் செய்யத்தக்கதாக நியமனம் செய்யப்படுவார்கள் 2013 இல், நிதி ஆணைக்குழு அங்கத்தவர்களாக இருந்தவர்கள் திரு.ஆரியரத்ன ஹேவாகே (தலைவர்), திரு.எம்.என்.ஜுனைட், திரு.சி.பி.இ.குணசிங்கம், கலாநிதி.பி.பீ.ஜயசுந்தர (பதவி வழி அங்கத்தவர்), மற்றும் திரு.அஜித் நிவாரட் கப்ரால் (பதவி வழி அங்கத்தவர்)

### 3.2 நிதி ஆணைக்குழு செயலகம்


நிதி ஆணைக்குழு செயலகம் ‘‘ஏ’’ தர திணைக்களமாகக் கடமைகளை ஆற்றுகின்றது. அது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயலாளரின் தலைமையில் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், உள்ளகக்கணக்காய்வாளர், உதவிப் பணிப்பாளர்கள்,, நிர்வாக உத்தியோகத்தர், உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், முகாமைத்தவ உதவியாளர்கள் மற்றும் சிற்றூழியர்கள் ஆகிய பல்வேறு பணியாளர்களைக் கொண்டுள்ளது.

### 3.3 2013.12.31 திகதியில் உள்ளவாறு உத்தியோகத்தர்கள்

| பதவி | சேவை | வேதன குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதைய ஆளணி | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | நிரந்தரம் | அமையம் | ஒப்பந்தம் |
| செயலாளர் | | SL 3 | 01 | 01 | | |
| பணிப்பாளர் | இதிசே/இநிசே/இகசே/திகள | SL1 | 04 | 03 | | |
| பிரதிப்பணிப்பாளர் | இதிசே/இநிசே/இகசே/திகள | SL1 | 04 | 02 | | |
| உள்ளக கணக்காய்வாளர் | இகசே II | SL1 | 01 | - | | |
| உதவிப்பணிப்பாளர் | இதிசே/இநிசே/இகசே/திகள | SL1 | 05 | 01 | | |
| **சிரேஷ்ட மட்டம் - மொத்தம்** | | | **15** | **07** | | |
| நிர்வாக உததியோகத்தர் | பொமுஉசே,அதி சிறப்பு | MN 7 | 01 | 01 | | |
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | | MN 5 | 01 | 01 | | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப உத்தியோகத்தர் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவை/ வகுப்பு II/ தரம் II | MT | 01 | - | | |
| **மூன்றாம் நிலை உத்தியோகத்தர்** | | | **03** | **02** | | |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திணைக்கள | MN 4 | 12 | 09 | | |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர். | திணைக்கள | MN 4 | 10 | 03 | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பொது முகாமைத்துவ உதவியாளர் | பொ.மு.உதவியாளர் | MN 2 | 13 | 07 | | |
| தரவு பதிவு இயக்குநர் | திணைக்கள | MN 1 | 01 | - | | |
| **இரண்டாம்நிலை-மொத்தம்** | | | **46** | **26** | | |
| சாரதி | சாரதிகள் சேவை | PL3 | 08 | - | 04 | |
| காசேஉ | காரியாலய சேவகர் KKS | PL1 | 05 | 03 | 01 | 01 |
| **ஆரம்ப நிலை-மொத்தம்** | | | **13** | **03** | **05** | **01** |

3.4 நிறுவக அட்டவணை



## 4. 2013 இல் நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை

நிதி ஆணைக்குழுவின் பிரதான கடமை நாட்டில் சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக மாகாணங்களுக்கிடையே நிதிகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அத்தகைய நிதிகளை விளைதிறனுள்ள வகையில் பயன்படுத்தி நோக்கங்களை அடைவதற்காக வழிகாட்டுதல்களையும் தொழில் நுட்ப வழிகாட்டுதல்களையும் வழங்குதல். இச் செயன் முறையில், நிதி ஆணைக்குழு தலைவரின் தலைமையில் தேவையான கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டில் மூன்று தடவைகள் குழு கூடியது.

நிதி ஆணைக்குழுவில் ஆறு பகுதிகள் உள்ளன

1. கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பகுதி
2. பெறுபேற்று அடிப்படைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் பகுதி
3. பாதீடு மற்றும் எதிர்வுகூறல் பகுதி
4. கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுப் பகுதி
5. நிர்வாகப் பகுதி
6. நிதிப் பகுதி

அரசியலமைப்பால் நிதி ஆணைக்குழுவுக்கு சுமத்தப்பட்ட பொறுப்புகள் சம்பந்தமான கடமைகளை நிறைவேற்றுவதில் கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பகுதி, பெறுபேற்று அடிப்படைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் பகுதி மற்றும் பாதீடு மற்றும் எதிர்வுகூறல் பகுதி ஆகியன பொறுப்பேற்று செயலாற்றின. நிர்வாகம் மற்றும் நிதிப்பகுதி ஆகியவற்றால் துணைச்சேவைகள் வழங்கப் பட்டன.

### 4.1 கொள்கை ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பகுதி

மாகாணங்களுக்கிடையில் நிதியை எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெனவும், அவை தொடர்பான கொள்கைகள் மற்றும் அடிப்படைக் கொள்கைகள் 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு, பாதீட்டு ஏற்பாடுகளுக்கான 2014 ஆம் ஆண்டுக்குரிய பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இப் பரிந்துரைகள் அமைச்சரவையின் அனுமதி பெற்ற பின்னர் அதி மேதகு ஜனாதிபதியால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

குறிப்பிட்ட வருடத்தில், நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட மூலதனக்கொடைக் கோரிக்கைகள் தொடர்பான வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு, 2014 ஆம் ஆண்டுக்கான மூலதனத் தேவைகள் மீதான தங்களுடைய நிதித்தேவைகளை மாகாண அதிகாரிகள் சமர்ப்பித்தன. மாகாணங்களால் செய்யப்பட்ட தேவைகள் மதிப்பிடப்பட்ட பின்னர், தேவையான மூலதனக் கொடைகள் பரிந்துரையுடன் பொதுத்திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு பொதுத் திறைசேரி வழங்கிய மாகாண மூலதனக் கொடைகள் 2013 ஆம் ஆண்டு மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்தச் செயன்முறையில், மக்களின் வாழ்க்கைத்தரத்துடன் மிக நெருங்கிய சில குறியீடுகளோடு தொடர்பான புள்ளிவிபர வாய்பாடு கணக்கில் எடுக்கப்பட்டு பின்பற்றப்பட்டது. இத்தகைய குறியீடுகளில் மாகாண தனிநபர் வருமானம், வறுமை விகிதம், குழந்தை மற்றும் பிரசவ மரண வீதங்கள், கல்லூரி அனுமதி விகிதங்கள், மாணவர்களின் செயலாற்றுகை, வீடுகளின் தரங்கள் மற்றும் மாகாண வீதி வலைப்பின்னல் புலப்படும். 2014 ஆம் ஆண்டில் மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மாகாண மூலதனக் கொடைகள் பின்வருமாறு.

*ரூபா.மில்லியன்*

| மாகாணம் | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை | அபிவிருத்தித்திட்டங்கள் | காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கொடை |
|---|---|---|---|
| மேல் | 1,270 | 1,010 | 475 |
| மத்திய | 1,230 | 2,267 | 430 |
| தென் | 1,230 | 485 | 380 |
| வட | 1,035 | 4,516 | 280 |
| கிழக்கு | 1,000 | 2,206 | 340 |
| வட மேல் | 1,140 | 980 | 350 |
| வட மத்திய | 1,000 | 2,043 | 350 |
| ஊவா | 1,150 | 2,393 | 330 |
| சப்பிரகமுவ | 1,150 | 3,095 | 335 |
| **மொத்தம்** | **10,205** | **18,995** | **3,270** |

துறைகள் / முகவர்களுக்கிடையில் மா கு அ PSDG கொடையை ஒதுக்கும் போது, கடந்த கால செயலாற்றுகை, நிறுவன ஆற்றல், வெளிநாட்டு நிதியுடனான திட்டங்கள், அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கிடைக்கத்தக்க வளங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டுக்காக வெவ்வேறு துறைகள் / முகவர்களுக்கிடையில் ஒதுக்கப்பட்ட மா கு அ PSDG கொடை இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

மக்களின் நன்மைக்காக மாகாணங்களுக்கிடையில் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் விளைதிறனுள்ள பயன்பாடுகளை உறுதி செய்வதற்காக, நிதி ஆணைக்குழுவால் வழிகாட்டுதல்களின் சுருக்கமான நூல்திரட்டு, 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வழங்கப்பட்டது. இந்த வழிகாட்டுதல்கள் 2014 ஆம் ஆண்டுக்காக மாகாண அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக கொள்கைகள் கற்கை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட உதவியுடன் 2012 ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையை நவீன அணுகுமுறையில் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைவாக, பிரதான அபிவிருத்தித் துறைகளின் கீழ் முதலீடுகள் மூலம் மாகாண அபிவிருத்தி தொடர்பான விசேட அத்தியாயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந் நோக்கத்துக்காக மாவட்ட செயலாளர்கள் மற்றும் தேசிய மட்ட முகவர்களிடமிருந்து தேவையான தகவல்கள் பெறப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவில் இடம் பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, 2009-2011 காலப்பகுதியில் மாகாண மூலதன மற்றும் மீள்வரும் செலவுகளால் ஏற்பட்ட விளைவுகள் தொடர்பாக ஓர் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. மொத்தச் செலவில் கிட்டத்தட்ட 80% வீதம் மாகாணத்தின் மீள்வரும் செலவாக இருந்ததால், இந்த ஆய்வின் கீழ் மீள்வரும் செலவு தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது. இந்த ஆய்வில் கல்வி, சுகாதாரம், வீதிகள்,நீர்ப்பாசனம், விவசாயம், சமூக சேவைகள் மற்றும் நன்னடத்தை மற்றும் குழந்தைப் பராமரிப்பு ஆகிய துறைகள் உள்ளடக்கப்பட்டதோடு, இறுதி அறிக்கை இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 4.2 பெறுபேற்று அடிப்படை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் பகுதி

2013 ஆம் ஆண்டில் இப் பகுதியினால் பின்வரும் அடிப்படைக்கடமைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

i. 2013 ஆம் ஆண்டுக்கான மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி ஆணைக்குழுவின் சம்மதம் வழங்கப்பட்டது.

ii. 2013 ஆம் ஆண்டில் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுகளுக்கு சம்மதம் வழங்கப்பட்டது.

iii. ஆணைக்குழுவால் 2014 ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகளை அதி மேதகு ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கான தயாரிப்பில் பங்களிப்பை வழங்கியது.

மேலேயுள்ள அடிப்படைக் கடமைகளுக்கு மேலதிகமாக, 2013 ஆம் ஆண்டில் கீழே தரப்பட்டுள்ள நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

i. வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வடமத்திய மற்றும் ஊவாவில் அரச-தனியார் கூட்டுத்தொழில் அணுகுமுறை மேம்பாடு தொடர்பாக உலக வங்கியால் ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வுகளை ஒருங்கிணைத்தது.
ii. 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் கண்டலம ஹோட்டலில் நிலையான அபிவிருத்திக்காக வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பாக செயலமர்வு ஒன்றை தொடர்பான மாகாண உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் ஒழுங்கு செய்தது. இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி பெறப்பட்டது.

### 4.3 வரவுசெலவு திட்டமிடல் மற்றும் எதிர்வுகூறல் பகுதி

இந்தப் பகுதியின் பிரதான கடமைகள், மாகாணங்களின் மீள்வரும் தேவைகளை மதிப்பீடு செய்த பின்னர், மாகாண நிதித் தேவைகளை பொதுத்திறைசேரிக்கு பரிந்துரை செய்தல் மற்றும் திட்டக்கொடையை மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

மாகாணங்களுக்கு நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைவாக 2014 ஆம் ஆண்டுக்கான மீள்வரும் தேவைகளுக்கு அவசியமான தொகைகளை நிதி ஆணைக்குழு பெற்றுக்கொண்டது. மாகாணங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மீள்வரும் தேவைகளை மதிப்பீடு செய்தபின், வருமான இலக்குகளைக் கழிப்பதன் மூலம் உண்மையான தேவைகள் கணக்கிடப்பட்டது. கவனத்தில் கொள்ளும் பொருட்டு திட்டக்கொடைக்கான பரிந்துரைகள் பொதுத்திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டுக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட திட்டக்கொடையை கீழேயுள்ள அட்டவணை காட்டுகின்றது.

**ரூபா.மில்லியன்**

| **மாகாணம்** | **திட்டக் கொடை** |
|---|---:|
| மேல் | 9,110 |
| மத்திய | 15,765 |
| தென் | 13,945 |
| வட | 11,622 |
| வட மேல் | 15,160 |
| வட மத்திய | 9,095 |
| ஊவா | 11,115 |
| சப்பிரகமுவ | 14,150 |
| கிழக்கு | 12,632 |
| **மொத்தம்** | **112,594** |

2013 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடைபெற்ற முதலமைச்சர்களின் மகாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக ,மாகாண மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் மட்டத்தில் வருமானத்தை அதிகரிப்பதற்கான அறிக்கை யொன்று தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆரம்ப நடவடிக்கையாக, பொல்கொல்லையிலுள்ள தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தில் மாகாண மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் மட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் பங்குபற்றலோடு 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் ஒரு செயலமர்வு நடைபெற்றது. செயலமர்வின் முடிவுகளின் மீதான அடிப்படையில் விரிவான அறிக்கையொன்று அடுத்து இடம் பெறும் முதலமைச்சர்களின் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

### 4.4 கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் பகுதி

கொள்கை மற்றும் அமுலாக்கல் மட்டத்தில் மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கண்காணிக்கும்படி மாகாணங்களுக்கு பணிக்கப் பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் மும்மொழிகளிலும் நாளது வரையிலுமான விடயங்களை அற்றைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

### 4.5 நிர்வாகப் பகுதி

i. தனியாள் கோவைகள் மற்றும் ஏனைய சாதனங்கள் ஆகியவற்றைப் பேணுதல் உள்ளடங்கலாக ஆளணி முகாமைத்துவம்:
வருடாந்த சம்பள ஏற்றங்களுக்கான அனுமதி பெற்ற பின்னர் உரிய கொடுப்பனவுகள் செய்யப் பட்டுள்ளது. சில உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் பெயரில், சேவைச் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ii. சிட்டைகளுக்கான கொடுப்பனவுகள்:

கொடுப்பனவுகள் தொடர்பான உறுதிச்சீட்டுகள், செயலாளரின் அனுமதி பெற்றுக்கொண்ட பின்னர் ஆணைக்குழுவால் கொடுப்பனவுக்காக நிதிப் பகுதிக்குக் சமர்ப்பிக்கப் பட்டன. தொடர்பான காசோலைகள் முடிவு செய்யப்பட்டதும், தொடர்பான ஆட்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அவற்றை அனுப்பி வைப்பதற்கு நிதிப்பகுதி ஆயத்தங்களைச் செய்துள்ளது. சகல கொடுப்பனவுகளும் முறையாக ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.

iii. பாதுகாவல் மற்றும் துப்பரவாக்கும் சேவைகள் ஆகியவை தொடர்பான மேற்பார்வை:

சேவை உடன்படிக்கைகளில் உள்ளடங்கியுள்ள வாசகங்களின் பிரகாரம் சேவைகள் தொடர்பான சகல உறுதிச்சீட்டுகளும் பரிசீலிக்கப்பட்டன. பின்னர், உறுதிச் சீட்டுகள் பரிந்துரையுடன் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு, நிதிப் பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச் சீட்டுக்கள் மீது கொடுப்பனவுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

iv. அலுவலக சுற்றுப்புறம் மற்றும் ஏனைய சொத்துக்களைப் பராமரித்தல்:

வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்படும் இந்த அலுவலகம்- சுற்றுப்புறம், உரிமையாளராலேயே பராமரிக்கப் படுவதோடு, ஆணைக்குழுவின் நிர்வாகப்பகுதியால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது. சேவை உடன்படிக்கைகளின் பிரகாரம் வாகனங்கள், கணினிகள், அச்சிடும் கருவிகள்,பிரதி, எடுக்கும் இயந்திரங்கள், மற்றும் தொலை நகல் இயந்திரங்கள் ஆகியவற்றின் பராமரித்தல், திருத்துதல் ஆகிய வேலைகள் இந்தப் பகுதியால் மேற்கொள்ளப்படுகின்றன.

v. விடுதலை, கடன்கள்,சம்பள ஏற்றங்கள் தொடர்பாக நிர்வாகப்பகுதியின் நாளாந்த நடவடிக்கைகள்:

விடுதலை தொடர்பான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப் பட்டதும் அவை முறையாக ஆவணப் படுத்தப் பட்டு, விரல் பதிவு அடையாள இயந்திர அறிக்கைகளைப் பயன்படுத்தி விடுதலைப்பதிவேடு நிகழ் பதிவேட்டில் நாளது வரையிலான தகவல்கள் பதியப்படுகிறது. கடமை விடுதலை, குறுகிய விடுதலை மற்றும் வெளியூர்களுக்கான உத்தியோக விஜயங்கள் தொடர்பான ஆவணங்கள் முறையாகப் பேணப்படுவதோடு, தொடர்பான பதிவுகள் கணினியிலும் பதியப்படுகிறது. மேலும், கணினியைப் பயன்படுத்தி , செயலாளரால் அனுமதிக்கப்படும் தாமதமான வரவுகளும் முறையாக ஆவணப்படுத்தப்படுகிறது.

vi. பொருட்களையும் சேவைகள் ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளல்:
துப்பரவாக்கல் மற்றும் பாதுகாப்புச் சேவைகளுக்காக, பல்வேறு முகவர்களிடமிருந்து விலைக்கூறுகள் கோரப்பட்டு, மிகக் குறைந்த தொகையைக் கோரியவர்கள் என்ற அடிப்படையில் , விஷன் கெயர் பிரைவேட் லிமிட் மற்றும் டபிள்யு.ஈ. செக்கியூறிற்றி பிரைவேட் லிமிட் சேவைகளை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப் பட்டார்கள். இந்த

முகவர்கள் சேவை உடன்படிக்கைகளில் சொல்லப்பட்ட வாசகங்களுக்கு அமைவாக தங்கள் சேவைகளை குறிப்பிடப் பட்ட வருடத்தில் வழங்கினார்கள்.

vii. பயிற்சி மற்றும் அபிவிருத்தியை எளிதாக்குதல்:
உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி நெறிகளில் பங்கு பற்ற வசதிகள் வழங்கப்பட்டது.

**பயிற்சிகளின் விபரங்கள்- உள்ளூர்**

வழங்கப்பட்ட பயிற்சிகளின் விபரங்கள்- உள்ளூர்

| பெயர் மற்றும் பதவி | பயிற்சி-வேலைத்திட்டம் |
|---|---|
| திருமதி.டி.ரி.கே.பெரேரா –பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | • களஞ்சிய முகாமைத்துவம்(பொது நிர்வாக அமைச்சு பயிற்சி நிறுவகத்தால் நடாத்தப்பட்டது) –06.02.2013-08.02.2013) |
| திருமதி.எம்.ஏ.எப்.றிப்னா – பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | • பொது நிதி முகாமைத்துவம் (பொது நிர்வாக அமைச்சு பயிற்சி நிறுவகத்தால் நடாத்தப்பட்டது) – (04.03.2013-08.03.2013) |
| திருமதி.துர்க்கா ஜயசிங்க – பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | • அரச உத்தியோகத்தரின் முற்பண 'பி' கணக்கு (பொது நிர்வாக அமைச்சு பயிற்சி நிறுவகத்தால் நடாத்தப்பட்டது) – (27.03.2013) |
| திருமதி.பி.கமகே – பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | • சம்பள மாற்றுதல்கள் (இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தால் SLIDAநடாத்தப்பட்டது) – (24.06.2013-25.06.2013) |
| திருமதி.ஏ.பி.எஸ்.பி.சமரதுங்க – பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | • ஓய்வூதிய நடைமுறைகள் (இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தால் SLIDAநடாத்தப்பட்டது) – (27.06.2013-28.06.2013) |
| திருமதி.டபிள்யு.பி.எஸ்.மங்கலிகா – நிர்வாக உத்தியோகத்தர் | • ஒழுக்காற்று நடவடிக்கை நடைமுறைகள் (இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தால் SLIDAநடாத்தப்பட்டது) – (08.07.2013-10.07.2013) |
| திருமதி.பி.கமகே – பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | • தமிழ் மொழி (அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடாத்தப்பட்டது) – (09.07.2013-19.12.2013) |

**4.6 நிதிப் பகுதி**

நிதி ஆணைக்குழுவால் சட்ட பூர்வமான மற்றும் ஏனைய கடமைகளையும் ஆற்றுவதை நிதிப்பகுதி எளிதாக்குகிறது. மேலும், பொதுத் திறைசேரியுடன் நல்ல இணைப்பைப் பேணுவதன் மூலம் வருடாந்த நிதித் தேவைகளுக்காக அவசியமான நிதியை ஏற்பாடு செய்வதற்கும் அத்தகைய நிதிளை சரியான வழியில் முகாமைப்படுத்துவதற்கும் பொறுப்பாக உள்ளது.

2013 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழு மீள்வரும் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக முறையே ரூபா-41,340.000.00 மற்றும் ரூபா.4,800,000.00 ஆகிய தொகைகளை பகிர்ந்து வழங்கியது.

மீள் வரும் செலவின் நிதிப் பயன்பாட்டு வீதம் 78% வீதமாக இருந்தது. மூலதனச் செலவின் நிதி பயன்பாடு குறைந்த மட்டத்தில் 16%. வீதமாக இருந்தது. பெரும்பாலான அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டதாகையால், குறிப்பிட்ட வருடத்தில் அத்தகைய பொருட்களை மீண்டும் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

33/2013 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைப் பிரகாரம், ஒதுக்கீட்டு மற்றும் சகல கணக்குகளும் உரிய திகதிகளுக்கு முன்பாகவே பொது கணக்குகள் திணைக்களத்துக்கும், கணக்காய்வு ஆணையாளர் நாயக திணைக்களத்துக்கும் சமர்ப்பிக்கப் பட்டது. 2013 இல் நிதி ஆணைக்குழுவின் நிதி ஏற்பாடுகள், செலவுகள் மற்றும் நிதிச் செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது.

**2013 இல் நிதி ஏற்பாடுகள், செலவுகள் மற்றும் நிதிச் செயலாற்றுகை**

ரூபா.

| கருத்திட்டக் குறியீடு | விபரம் | ஏற்பாடு | செலவு | நிதி ஆற்றுகை |
|---|---|---|---|---|
| | **மீள் வரும் ஏற்பாடு/ செலவு** | ரூபா. | ரூபா. | |
| | தனியாள் வேதனாதிகள் | 24,500,000.00 | 18,156,077.24 | 74% |
| | ஏனைய மீள்வரும் செலவுகள் | 16,840,000.00 | 13,886,568.67 | 82% |
| | **மொத்தம்** | **41,340,000.00** | **32,042,645.91** | **77.5%** |
| | **மூலதன ஏற்பாடு/ செலவு** | | | |
| 2002 | பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 600,000.00 | 52,695.00 | 8% |
| 2003 | வாகனங்கள் | 700,000.00 | 423,464.80 | 60% |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,000,000.00 | 18,050.00 | 2% |
| 2103 | பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 1,500,000.00 | 66,680.00 | 4% |
| 2401 | பயிற்சி மற்றும் ஆளுமையை உருவாக்குதல் | 1,000,000.00 | 208,000.00 | 20% |
| | **மொத்தம்** | **4,800,000.00** | **768,889.80** | **16%** |
| | **முழு மொத்தம்** | **46,140,000.00** | **32,811,535.71** | |

**முற்பணக் கணக்கு நடவடிக்கைகள்**

| விபரம் | செலவுக்கான உச்ச எல்லை | வரவுக்கான உச்ச எல்லை | பற்று மீதி உச்ச எல்லை |
|---|---|---|---|
| ஏற்பாடு | 3,500,000.00 | 1,000,000.00 | 20,000,000.00 |
| உண்மையான (நி.பி.505 (1) இன் கீழ் சீராக்கிய பின்னர்) | 2,053,763.00 | 1,619,437.00 | 7,160.488.00 |

## 5. பொது நிர்வாகம்

### 5.1 2013 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| தலைவர் | ஆரியரத்ன ஹேவகே |
| செயலாளர் | டபிள்யு.எச்.முனசிங்ஹ |
| பணிப்பாளர் | பி.சுமணபால |
| பணிப்பாளர் | ஏ.ரி.எம்.யு.டி.பி.தென்னக்கோன் |
| பிரதிப் பணிப்பாளர் | திருமதி. ஏ.பி.எல்.டி.டி.என்.பெர்னாண்டோ |
| பிரதிப் பணிப்பாளர் | எம்.எல்.ஏ.சந்திரதாச |
| பிரதிப் பணிப்பாளர்(நிதி) | திருமதி.யு.பி.விஜேஹேவா |
| நிர்வாக உத்தியோகத்தர் | திருமதி.டபிள்யு.எஸ்.மங்கலிகா |
| புள்ளி விபர உத்தியோகத்தர் | திரு.ஏ.கே.டி.சிஎன்.எஸ்.கருணாரத்ன |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.ரி.எம்.சி.குமாரிஹாமி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.பி.இந்திராதேவி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.கே.எஸ்.டி.நிலாந்தி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திரு.எஸ்.கே.கே.கமிந்த |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.ஆர்.ஆர்.ரணசிங்க |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திரு.எச்.எச்.பிரியந்த |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.எம்.சி.தமயந்தி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.ஏ.ஆர்.மரீனா |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.எஸ்.வை.திசாநாயக்க |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதிஇடபிள்யு.சி.ஆர்.பி.கங்கம்பொருவ |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.ஐ.வி.எல்.ஐ.லிலாந்தி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.எஸ்.வீரதுங்க |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திரு.என்.இரத்நாயக்கா |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திரு.டபிள்யு.பி.ஏ.விஜேசூரிய |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திரு.எம்.பி.எம்.ஏ.எச்.பண்டார |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.டி.டி.ஜே.குமாரி |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | திருமதி.பி.ஏ.எஸ்.பிரியதர்சனி |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | திருமதி.எஸ்.பி.சமரசேகர |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | திருமதி.டபிள்யு.ஆர.என்.பெரேரா |
| முகாமைத்துவ உதவியாளர் | திரு.ஈ.ஏ.எல்.இளையபெரும |
| முகாமைத்துவ உதவியாளர் | திருமதி.ஏ.பி.எஸ்.பி.சமரதுங்க |
| முகாமைத்துவ உதவியாளர் | திருமதி. பி.கமகே |
| முகாமைத்துவ உதவியாளர் | திரு.டி.கே.டி.கன்னங்கரா |
| முகாமைத்துவ உதவியாளர் | திருமதி.டி.ரி.கே.பெரேரா |
| முகாமைத்துவ உதவியாளர் | திருமதி.எம்.ஏ.எவ்.ரிப்னா |
| சாரதி | திரு.உபாலி செனெவிரத்ன |
| சாரதி | திரு.எம்.கே.ஆர்.பிரிமல் |
| சாரதி | திரு.பிபி.ஜி.ஏ.தயானந்த |
| காரியாலய சேவகர் O.E.S. | திரு.ரி.ஜயமினி |

| | |
|---|---|
| காரியாலய சேவகர் O.E.S. | திரு.யு.எச்.ஜி. எரங்க நயனஜித் |
| காரியாலய சேவகர் O.E.S. | திரு.ஏ.டபிள்யு.ரவீந்திர ஜகத் குமார |
| உதவியாளர்(ஒப்பந்தம்) | திருமதி..சி.டி.ஆட்டிகல |
| பயிற்சியாளர் | திருமதி.ஆர.ஏ.நிஷானி மாதுக்க ரணசிங்க |
| தரவு பதிவு இயக்குநர் (பயிற்சியாளர்) | திருமதி.டி.ஏ.சந்தியா சத்துராங்கனி |

### 5.2 நிதி ஆணைக்குழுவுக்கு இட மாற்றம் பெற்ற உத்தியோகத்தர்கள் - 2013

| | |
|---|---|
| பணிப்பாளர் | திரு.கே.பி.சண்டித் |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.என்.பி.சி.பிரியங்கனி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.டபிள்யு.டபிள்யு.எஸ்.மானெல் |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.கே.டி.பி.டி.சிரிவர்த்தனா |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.எச்.ஜி.டி.கே.கருணாரத்ன |
| நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | திருமதி.டுபிள்யு.எம்.என்.ஜி. கருணாரத்ன |
| முகாமைத்துவ உதவியாளர் | திருமதி.டி.பி.ஜயசிங்க |
| முகாமைத்துவ உதவியாளர் | திருமதி.எம்.ஏ.டி.ஆயிஷா பெர்னாண்டோ |

### 5.3 நிதி ஆணைக்குழுவுக்கு புதிய நியமனங்கள்- 2013

| | |
|---|---|
| காரியாலய சேவகர் O.E.S. | திரு.ஏ.டபிள்யு.ரவீந்திர ஜகத் குமார |

## 6. நடுத்தர காலத் தில் செயலாற்றுகைகைய பலப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட உபாயங்கள்

மாகாண திட்டமிடல் மற்றும் பாதீடு தொடர்பாக புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட அணுகுமுறைக்கு பொருத்தமானதாக, புதிய அமைப்பில் நிதி ஆணைக்குழுவின் சகல உத்தியோகத்தர்களின் அறிவையும் ஆற்றல்களையும் மேம்படுத்துவது அவசியமாகும். மேலும், மொத்தமாக உத்தியோகத்தர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் பொருட்டு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். சுருக்கமாக அவை பின்வருமாறு அமையும்:-

(i) பெறுபேற்று அடிப்படை திட்டமிடல் மற்றும் பாதீட்டு முறைகள் தொடர்பாக தேவையான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளைப் பெறுவது அவசியமாகும். மாகாணங்களால் சமர்ப்பிக்கபடும் எல்லா அபிவிருத்தித் திட்டங்களும் நிதி ஆணைக்குழுவால் மதிப்பிடப்படுவதால், பெறுபேற்று அடிப்படை முகாமைத்துவ அணுகுமுறை RBM approach தொடர்பாக பதவிநிலை உத்தியோகத்தரின் தொழில்நுட்ப அறிவு விருத்தி செய்யப்பட வேண்டும். அதற்கு மேலும், உத்தியோகத்தர்கள் அரசாங்க கொள்கைகள், முன்னுரிமைகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொடர்பாக தங்கள் அறிவை நாளது வரையில் அற்றைப்படுத்துவதும் அவசியமாகும்.

(ii) ஆணைக்குழுவுக்கும் மாகாணங்களுக்கும் இடையில் தொழில் ரீதியான தொடர்புகளில் தகவல் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுவதால், சகல தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் புதிய பொதிகள் மற்றும் மின்னஞ்சல் பாவனை தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வது

அவசியமாகும். பல்கலைக்கழகங்கள், ICTA மற்றும் SLIDA ஆகிய நிறுவனங்களுடன் இது தொடர்பாக நெருங்கிய உறவைப் பேணுவதும் அத்தியாவசியம்

(iii) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள், வெளிநாட்டு பயிற்சி நிறுவகங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி வழங்கும் முகவர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதால் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் ஆங்கில மொழியில் சிறந்த அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எழுதுதல், வாசித்தல் மற்றும் கிரகித்தல் ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்துவதும் அவசியமாகிறது. அரசாங்கத்தின் மொழிக்கொள்கை தொடர்பாக தமிழ் மொழியில் பயிற்சியும் பரிந்துரைக்கப்படுகிறது.

(iv) அலுவலக முகாமைத்துவம் மற்றும் தொடர்பான நடவடிக்கைகளில் தவறுகள் நேர்வதால், உத்தியோகத்தர்களுக்கு அலுவலக முகாமைத்துவ முறைமைகள் மற்றும் பயன்பாடு தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக SLIDA நிறுவனத்துடன் நெருங்கிய உறவைப் பேணுவதும் அத்தியாவசியம்

(v) வெளிநாட்டு முகவர்களின் நிபுணத்துவ உதவிகளுடன், உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் அலுவலக முகாமைத்துவம் ஆகியவை தொடர்பான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய வேலைத்திட்டங்களில் , குழுவாக இயங்குதல், ஆளணி முகாமைத்துவம், வேலை ஒழுங்கு, சூழல் அலுவலன சுற்றாடல் மற்றும் சொத்துக்களை பேணுதல் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 7. எண்பார்வை அறிக்கை

2013 எண்பார்வை அறிக்கை தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1.3 (அ) <u>பதிவேடுகள் பேணப்படாமை</u>

நி.பி.110 க்கு அமைவாக, சேதங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பாக அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு, அது முறையாகப் பேணப்படுகிறது.

(ஆ) <u>பாதீட்டு வேறுபாடுகள்</u>

வாடகைக்குப் பெறப் பட்ட கட்டிட வீட்டு உரிமையாளரால் பேணுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் செலவு விடயங்களில் சில சேமிப்புகளை அவதானிக்க முடிந்துள்ளது. மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கான பதிலீடுகளும் இல்லை.

(இ) <u>அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு தொடரபான கணக்கு இணக்கக்கூற்று</u>

i. வரவேண்டிய மிகுதிகளைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ii. 31-12-2008 திகதியிடப்பெற்ற 30/2008 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு முரணான வகையில் கொடுக்கப்பட்ட இடுக்கண் கடன்களின் மிகுதி ஏற்கெனவே உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது.

1.4 <u>நல்ல ஆட்சி மறறும் பொறுப்புடைமை</u>

1.4.1 வருடாந்த பெறுகைத் திட்டம்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சால் 17-02-2014 திகதியிடப் பெற்ற PFD/RED/01/04/2014/01 இலக்க கடிதம் மற்றும் 01/2014 03 (e)இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம் நிதி ஆணைக்குழு போன்ற நிறுவனங்களால் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய தேவையில்லை. ஆகவே அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட வில்லை.

1.4.2 அரச சொத்துகள் தொடர்பான வருடாந்த திணைக்கள ஆராய்வு மீதான அறிக்கை

அரச சொத்துகள் தொடர்பான வருடாந்த திணைக்கள ஆராய்வு மீதான அறிக்கையை அடிப்படையாக வைத்து, பயன்படுத்தாத பொருட்களுக்கு முடிவு கட்ட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. படிவம் பொது-47 இலிருந்து அத்தகைய பொருட்களுக்கு முடிவு கட்டிய பின்னர் பொருட்பதிவுகள் நாளது வரையில் இற்றைப்படுத்தப் பட்டுள்ளது.

1.5 இழப்புகள் மற்றும் சேதங்கள்

இது தொடர்பாக விசாரணை யொன்று மேற்கொள்ளப்பட்டது. பொலிஸ் அறிக்கையின் படி, ஆணைக்குழு சாரதி குற்றமிழைக்க வில்லை. இழப்பீடு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

1.6 மனித வள முகாமைத்துவம்

உத்தியோகத்தர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும் மற்றும் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கான தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் இன்மையாலும் சில பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன. வெற்றிடமாக உள்ள பதவிகளை நிரப்புவதற்கு அதிக அளவிலான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

இணைப்பு-1

பகிர்வு-2014

**மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை(PSDG)**

ரூபா.மில்லியன்

| இல. | முகவர் | மே மா | ம மா | தெ மா | வ மா | கி மா | வமே மா | வம மா | ஊவா | சப்பிர | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வீதிகள் | | | | | | | | | | |
| | 1.1.மாகாணவீதிகள் புனரமைப்பு | 365 | 270 | 240 | 100 | 60 | 250 | 160 | 200 | 215 | 1,860 |
| | 1.2.மலையகப்பாதைகள் | 19 | 28 | 24 | - | - | - | - | 29 | 19 | 119 |
| 2 | போக்குவரத்து | 24 | 21 | 21 | 15 | 22 | 12 | 10 | 15 | 16 | 156 |
| 3 | காணி | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 27 |
| 4 | கல்வி | 185 | 180 | 175 | 200 | 175 | 182 | 155 | 195 | 190 | 1,637 |
| 5 | சுகாதாரம்(மேல்நாட்டு மருததுவம்) | 170 | 170 | 165 | 200 | 175 | 142 | 125 | 155 | 165 | 1,467 |
| 6 | சுதேச மருத்துவம் | 23 | 20 | 24 | 28 | 32 | 28 | 30 | 30 | 27 | 242 |
| 7 | விளையாட்டு | 14 | 13 | 13 | 14 | 15 | 12 | 12 | 15 | 15 | 123 |
| 8 | உள்ளூராட்சி | | | | | | | | | | |
| | 8.1. உள்ளூர் அதிகாரசபை வீதிகள் | 142 | 136 | 150 | 50 | 60 | 93 | 75 | 91 | 90 | 887 |
| | 8.2. உள்ளூர் அதிகாரசபை சேவைகள் | 25 | 19 | 20 | 27 | 20 | 24 | 20 | 18 | 22 | 195 |
| | 8.3. கழிவுப்பொருள் முகாமைத்துவம் | 45 | 24 | 25 | 16 | 15 | 15 | 15 | 15 | 15 | 185 |
| 9 | நன்னடத்தை மற்றும் குழந்தைப்பராமரிப்பு | 15 | 12 | 18 | 20 | 17 | 20 | 14 | 15 | 15 | 146 |
| 10 | சமூக சேவைகள் | 10 | 11 | 20 | 16 | 16 | 12 | 10 | 10 | 10 | 115 |
| 11 | வீடமைப்பு | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 27 |
| 12 | கலாசாசர மற்றும் மத அலுவல்கள் | 3 | 3 | 3 | 4 | 4 | 3 | 3 | 4 | 4 | 31 |
| 13 | விவசாயம் | 25 | 40 | 42 | 60 | 60 | 48 | 50 | 50 | 45 | 420 |
| 14 | கால் நடை வளர்ப்பு | 18 | 28 | 25 | 30 | 45 | 30 | 25 | 30 | 25 | 256 |
| 15 | நன்னீர் மீன் வளர்ப்பு | 5 | 6 | 10 | 15 | 15 | 17 | 12 | 10 | 5 | 95 |
| 16 | நீர்ப்பாசனம் | 14 | 21 | 31 | 30 | 40 | 40 | 90 | 34 | 21 | 321 |
| 17 | கிராம அபிவிருத்தி | 14 | 18 | 22 | 25 | 16 | 20 | 23 | 22 | 20 | 180 |
| 18 | சிறு கைத்தொழிலகள் | 12 | 12 | 12 | 10 | 10 | 12 | 9 | 10 | 12 | 99 |
| 19 | கிராமிய மாற்றுவலு | 3 | 13 | 10 | 4 | 5 | 7 | 4 | 8 | 8 | 62 |
| 20 | கூட்டுறவு அபிவிருத்தி | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 36 |
| 21 | சுற்றுலா | 20 | 28 | 32 | 26 | 40 | 20 | 25 | 27 | 25 | 243 |
| 22 | பிரதேச சமச்சீர் அபிவிருத்திக்கான விசேட திட்டங்கள் | 49 | 62 | 53 | 60 | 73 | 63 | 38 | 72 | 91 | 561 |
| 23 | பின்தங்கிய மற்றும் தனித்து விடப்பட்ட கிராம அபிவிருத்திக்கான திட்டங்கள் | 50 | 60 | 60 | 50 | 50 | 50 | 60 | 60 | 60 | 500 |
| 24 | நெகிழ்ச்சி முதலின் கீழ் திட்டங்கள் | 10 | 25 | 25 | 25 | 25 | 30 | 25 | 25 | 25 | 215 |
| | **உப மொத்தம்** | **1,270** | **1,230** | **1,230** | **1,035** | **1,000** | **1,140** | **1,000** | **1,150** | **1,150** | **10,205** |

குறிப்பு: நிதியகம தடுப்பு வீடு மேம்பாட்டுக்கான ரூபா 5 மில்லியன் உள்ளடங்கலாக தெ மா சமூக சேவைகள் 20 மில்லியன்